**<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>**

**முன்னிலை.** திரு.A.பாலகிருஷ்ணன், B.A., B.L.,
சார்பு நீதிபதி, கோபிசெட்டிபாளையம்
2025ஆம் ஆண்டு ஜுன் மாதம் 21ஆம் நாள் சனிக்கிழமை

**<u>இடைக்கால மனு எண்.11/2025</u>**
**<u>in</u>**
**<u>அசல் வழக்கு எண்.157/2004</u>**

1.ராம்குமார் மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி 3

/இடையே/

1.வித்யா ... எதிர்மனுதாரர்/வாதி

/இடையே/

2. வஞ்சியம்மாள்
3.ஜெயா
4.செந்தில்
5.வெங்கடேஷ்
6.கண்ணகி
7.மொட்டையன் (எ) ராமசாமி
8.தமிழரசு (எ) உலகநாதன்
9.பிரபு (எ) ஸ்ரீதர்
10.சிவராமன்
11.கண்ணகி
12.ஹேமா
13.S.சகுந்தலா
14.சந்திரன்
15.T.R.ராமகிருஷ்ணன்
16.மீனாட்சி
17.மாரியப்பன்
18.விஜயலட்சுமி
19.கிருத்திகா
20.செந்தில்
21.தங்கராஜ்

22.சீனிவாசன்
23.சிவகாமி
24.தனபாக்கியம்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 09.06.2025–ம் தேதி என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் சாட்சி–3 தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.வெங்கடாசலம்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றிந்த திரு.V.P.கார்த்திகேயன்,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரர்/பிரதிவாதி தரப்பு சாட்சி3–ன் வாயிலாக தாக்கல் செய்யப்படும் ஆணவங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 8கீழ்1(A)3 பிரிவு 151–இன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்களின் மனுவின் சுருக்கம்.**

i) தாவா 3–அயிட்ட சொத்துக்களில் 1,2 விண்ணப்பத்தில் கண்ட ஆவணங்கள் மனுதாரர் கைவசம் இருந்தது என்றும் கண்ணகி தன்னை சாட்சியம் அளிக்க அழைத்த போது மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு கேட்டுக்கொண்டார் என்றும், அதன் அடிப்படையில் மனுதாரர் தரப்பில் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதாக குறிப்பிட்டுள்ளார்.

3. **1 எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.**

கிரைய ஆவணம் 1 முதல் 6 ஆவணங்கள் வழக்கில் நிலுவையில் இருந்த காலத்தில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஆகும். சொத்துரிமை மாற்று சட்டம் பிரிவு 53–ன் பிரிவு மேற்படி ஆவணங்கள் தடைசெய்யப்பட்டுள்ளது. இம்மனுதாரர் 3–ம் நபர் என்பதால் உயிலினை அவர் தாக்கல் செய்ய இயலாது. எனவே, மனுதாரர் தரப்பில் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு கூறியுள்ளார்.

4). இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5). இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்காவணங்கள் பரிசீலனை

செய்யப்பட்டது.

**6) தற்போது தீர்மாணிக்க வேண்டிய சங்கதி யாதெனில் மனுதாரரின் மனு அனுமதிக்கப்படதக்கதா? அல்லது இல்லையா? என்பதே ஆகும்.**

**தீர்வு:-**

i) வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ii) அசல் வழக்கின் நாட்குறிப்பேட்டை பரிசீலனை செய்கையில், கடந்த 07.04.2025-ம் தேதியில் பிரதிவாதிகள் தரப்பில் ராம்குமார் என்பவர் பி.சா.3 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி பி.சா.3-ன் முதல் விசாரணை சாட்சியத்தின் தொடர்ச்சிக்காக வேண்டி அசல் வழக்கானது 09.04.2025-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

iii) அசல் வழக்கு 09.04.2025-ம் தேதியில் விசாரணைக்கு வந்தபோது மேற்படி பிரதிவாதி தரப்பில் பி.சா.-3 ஆக விசாரணை செய்யப்பட்ட சாட்சியால் மனுவில் கூறப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொள்ள வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iv) மனுதாரர் இம்மனுவில் கூறியுள்ள ஆவணங்களில் 1,2 ஆவணங்கள் கிரைய ஆவணத்தின் பதிவு ஆவணங்களாகும். 3வது ஆவணம் உயில் சாசனமாகும். 4,5ஆகிய ஆவணங்கள் வீட்டுவரி ரசீது ஆவணமாகும். 6வது ஆவணம் சம்மத பத்திரமாகும். மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மனுவில் கூறியுள்ள ஆவணங்கள் வழக்கு நிலுவையில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றும், உயில் சாசனம் ஏற்கதக்கதல்ல என்றும் மேற்படி ஆவணங்கள் சட்டப்படி ஏற்கதக்க ஆவணங்கள் கிடையாது என்றும் ஆட்சேபனை செய்யப்பட்டுள்ளது.

v) மனுதாரர் மனுவில் கூறியுள்ள ஆவணங்கள், வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்களா? என்பதையும், மேற்படி ஆவணங்கள் வழக்குக்கு தொடர்புடைய ஆவணங்களா? என்பதையும், மேற்படி ஆவணங்கள் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதையும், மேற்படி ஆவணங்களை யாரால் முன்னிலைப்படுத்தப்பட்டு வாதுரைக்கப்படுகிறதோ அவரே அதன் நம்பத்தன்மையை நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள்.

vi) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள, ஆவணத்தின் உண்மைத்தன்மை மற்றும் சட்டப்படி வலியுறுத்தக்கூடிய நிலை குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை செய்வதற்கு போதிய சந்தர்ப்பங்கள் உள்ளது.

vii) ஒரு ஆவணத்தை வழக்கில் ஏற்பதால் மட்டுமே, அது வழக்கிற்கு

தொடர்புடைய ஆவணமாக கருத இயலாது. அதன் உண்மைத்தன்மை, நம்பத்தன்மை மற்றும் தொடர்புடைமை ஆகியவற்றை சம்பந்தப்பட்ட தரப்பினர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அவ்வகையில் மனுதாரரின் மனுவினை அனுமதிக்கலாம் என்று மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காணுகிறது.

7) **எனவே முடிவாக,** மனுதாரரின் மனு அனுமதிக்கப்படுகிறது. மனு செலவுத்தொகையில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்து இன்று இந்த உத்தரவு 2025ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

A BALAKRISHNAN

Digitally signed by A BALAKRISHNAN
Date: 2025.06.21 16:33:32 +0530

சார்பு நீதிபதி,
கோபிசெட்டிபாளையம்.